University of Sri Lanka RECEIVED 1989-9-8 Periodicals Division Library

Subscription.
Inland: Rs. 90/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q / J / 104 / News / 89
Established : 1841 : A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 25 AUGUST 1989 No. 34
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to
THE EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## The Former Bishop of Colombo leaves for Australia.

The former bishop of Colombo, the Rt. Rev. Swithin Fernando and his wife Gwen leave Sri Lanka, this month to settle down in Melbourne, Australia. The diocese of Colombo bade them farewell at a lunch on the 27th of July at the diocesan chamber. In a letter to the Archdeacon of Jaffna, Bishop Swithin wanted the following lines to be sent to all his friends in the North.

"I am extremely happy that I had a few minutes conversation with your Archdeacon Fr. Donald and had news of you, my friends in the northern parts of our diocese. Gwen and I carry very happy memories of the time we spent with you all from time to time and the many friends we made and continue to count as friends. If times were easier I would not have failed to pay a visit to you all but, as you know that is not possible. Among the letters I received at my retirement as Bishop of Colombo I count as most dear some of the letters I received from many of you, Gwen and I send our very sincere love to you all and shall always remember you all with much prayer".

He is an old boy of the Jaffna College Institute of Technology, Vaddukoddai.

## Prayer Room Dedicated.

At a simple ceremony on Thursday, 17-8-89, the Rev. D. C. Ratnasingham, Presbyter of the Uduvil Church dedicated a Prayer Room at the Reverend Eliathamby Memorial Girls' Home at Uduvil in memory of two members of the church.

The Room was furnished and equipped for use by the children of the Home by Mr. Albert Spenser to commemorate his two sisters, Miss Grace Spenser and Miss Jane Spenser, both senior members of the Uduvil Parish who had their home - call, during the time of the military offensives at Uduvil, Jane passed away on 13-11-87 and Grace followed her sister on 17-2-88.

The children of the Home sang special lyrics to mark the occasion. It was a quiet ceremony with only those associated with the home at Uduvil and the neighbours around the Home attending the function.

## Examination Success.

Mr. C. R. Premanathan, son of Mr. and Mrs. J. T. Thambiratnam of Uduvil has been successful in the B. Sc. (Engineering) Examination of the Long Beach University, California.

## Women Priests.

The Revd. Nan Peete was surprised by her instant celebrity status. 'I can't believe that people want to take pictures of me,' she said during a recent walking interview.

Walking interviews may become the only way to catch Peete as she races through hectic days at a rapid, energetic pace, coping with numerous requests for her opinion on this subject and her observation on that subject.

Peete was attending Lambeth at the invitation of the Archbishop of Canterbury as a general consultant to the Section on Mission and Ministry. She addressed last Friday's Plenary Session on the Ordination of Women.

"I wrote at least six speeches for Lambeth and composed at least another six in my head before deciding what to say to the bishops," Peete says. "My anxiety level rose as Lambeth drew closer, but when I approached the lectern in Plenary Hall, it was just as though I were about to preach a sermon."

Peete, rector of All Saints Church, Indianapolis, Indiana USA, was the first woman priest to address a Lambeth Conference. She was one of seven women consultants invited to the conference and one of two women consultants ordained to the priesthood. The other women consultants are :

- o Dorothea Etchells, formerly principal of St. John's College, the University of Durham, consultant to the Section on Mission and Ministry ;
- o Janet Hodgson, visiting fellow and tutor, College of the Ascension, Selly Oak, Birmingham, consultant to the Section on Mission and Ministry;
- o Vanessa Mackenzie, youth officer for the Diocese of Johannesburg, consultant to the Section on Christianity and Social Order ;
- o Mary Elizabeth Tanner, Board for Mission and Unity of the Church of England, consultant to the Section on Ecumenical Relations;
- o Elizabeth Anne Templeton, formerly lecturer in Divinity at the University of Edinburgh, consultant to the Section on Ecumenical Relations; and
- o The Revd. Margaret Wood, principal, Bishop Julius Hall, New Zealand Examining Chaplain, general consultant to the Section on Ecumenical Relations.

Wood talks about how women priests have enriched the life of the Church in New Zealand. 'The great fear among many that women would overrun the church (in New Zealand) has never been realized,' she says.

'No one has been accepted for training for ordination simply because she is a woman. What has happened is an increasing awareness of the place of women in the church.'

The Church in New Zealand began ordaining women as priests in 1977. Currently, there are 94 women priests and eight women deacons. Fourteen of these are Vicars in parishes ranging from small rural outposts to large suburban areas. Two women are co-vicars with their husbands, sharing time and stipend, four are priests-in-charge of parishes, and 14 serve as parish assistants. Others serve in administrative positions such as examining chaplains, canons, on the diocesan standing committees, and on th General Synod.

'I wouldn't want to suggest that there are no difficulties,' Wood says, 'but surrounding the difficulties is a deep feeling of rightness as ordained men and women fully exercise their ministry together in the light of the Gospel.'

Peete sums up the feeling of women who are ordained when she describes her role as a gift to women so that women may use their gifts to the fullest.

— *by Toni Graff.*

*At Rest:*

## Mr. Christadas Sivaguru.

The death which occurred on 14-8-89 of Mr. Christadas Katheresu Sivaguru, M. L. T. at Sampanthan Clinic, Jaffna removes sudddenly from our scene one who was of great service to the general community in Jaffna for many years.

The funeral service was held on 15-8-89 at 3 p. m. at his residence "malaragam" at chunnakam. Sevak (Rev.) Sam Alfred conducted the funeral service, associated with him was the Rev. D. R. Ambalavanar of the Christian Theological Institute, Chunnakam, and the Rev. Joseph Sarvanandhan of St. John's Church, Chundikuli. The remains were interred at the Uduvil Church burial grounds.

The deceased leaves behind his wife, Yogamalar two daughters — Usha Sivarajaratnam (France), Latha Mahendran (Chundikuli Girls' College) and a son Suresh (Nuffield School, Kaithady).

## Mr. Edwin Reginald Cristopher.

We regret to record the death which occurred on Monday, 7th of August, 1989 of Mr. E. R. Christopher (55) of Uduvil, a retired Sri Lankan Army Officer who since retirement has been associated closely with the Uduvil Church. He was a member of the Church Committee at the time of his death.

The funeral Service was held on Tuesday, the 8th of August at his residence at Uduvil, Sevak Rev. Sam Alfred conducted the service at home. The Rev. D. R. Ambalavanar preached the sermon and Mr. George Stephen paid the tribute.

The casket was borne by the members of the Church Committee from the residence to the hearse while members of the Youth League acted as pall bearers at the grave-side.

The deceased leaves behind his wife Suguna (Mcleod Hospital Nursing Staff), two daughters, Regina (Germany) and Jeyakumary (Staff Uduvil Girls' College) and a son John in Germany.

## OBITUARY.

## Mrs. E. R. Goonasegaram.

Death occured of Mrs. Emma Rosalind Goonasegaram (Jesudason) 7th August 1989 at the age of 76. She was living with her daughter at Nallur. The funeral service was held on Wednesday 9th at 3 p. m. Pastor of the CPM, Chundikuli conducted the service and preached the sermon. Mr. Aruliah paid a tribute to the life and witness of Mrs. Rosalind. She leaves behind two sons Atputharajah (Teacher, JCC), Thavam (U. K.), a daughter Savithri Ethirveerasingam and two sisters Esther Goonasegaram (Singapore), Hepsi Goonasegaram (Singapore) to bemoan her death. A large number of friends and relatives attended the service.

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது

நீதி ஜனத்தை உயர்த்தும் : பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 149 25 - 08 - 1989 [இதழ் 34


## சிந்தனை 27.

பணி விடை குற்றமற்று இருக்கட்டும். யோனு 3:10 — 4:11

இப்பகுதியில் மூன்று முக்கிய கதாபாத்திரங்கள் அரங்கேறுகின்றார்கள். ஒன்று யோனு, அடுத்தது நினிவே மக்கள், மற்றது இறைவன், மூவரும் வேறுபட்ட குண இயல்புகளுடன் உலக அரங்கில் அரங்கேறுகின்றார்கள்.

முதலாவது கதாபாத்திரம் யோனு. இவனுடைய குணவியல்பு, இன்றும் மனித இனத்திடம் காணப்படும் மனநிலைக்கு வேறுபட்டதாக இல்லை. தன் சித்தத்திற்கு ஒத்துக் குழல் ஊதாத இறைவனையும், வரலாற்றில் வேண்டப்படாதவர் என்று ஒதுக்கிவிடுபவன் மனிதன். இவ் இயல்பூக்கத்தை உள்ளடக்கிய யோனு, தன்னுடைய பக்தியையும் பற்றுறுதியையும் பயன்படுத்த முயற்சி செய்கின்றான். தனது செயற்பாட்டை, யோனு 4:3 வசனத்தின் மூலம் பிரதிபலித்து நிற்கின்றான்.

"கர்த்தாவே என்பிராணனை என்னைவிட்டு எடுத்துக் கொள்ளும். நான் உயிரோடு இருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நல்மாயிருக்கும்"

மனப் பக்குவம் இல்லாத பக்தியாளர்களும் பற்றுறுதியாளர்களும், பிறரைப் பற்றிக் கரிசனை அற்றிருப்பதும். அர்த்தமுள்ள பணிவிடைகளுக்குத் தடைக் கற்களாக இருப்பதும் இயல்பு. இன்றும் இத்தகைய மக்களைச் சந்திக்கின்றோம். இவர்கள் இறைத்திட்டத்தைச் சேதப்படுத்துபவர்களாகவும் இறைவனை வேதனைப்படுத்துபவர்களாகவும் இருப்பவர்கள். ஆதி. 4:9.

''கர்த்தர் காயீனை நோக்கி, உன் சகோதரனுகிய ஆபேல் எங்கே என்றார். அதற்கு அவன் நான் அறியேன் என் சகோதரருக்கு நான் காவலாளியோ என்றான்''

சகோதரனைச் சகோதரனிடம் விசாரிக்கும் இறைவரலாற்றில் காயீன் குற்றமுள்ளவனுகக் கணிக்கப்பட்டான். தன் சகோதரன் ஆபேலுடைய அழிவுக்குக் காரணமும் ஆனுன், இங்கும் யோனு என்ற இம்மனிதன், இறைவனில் பக்தியுள்ள எபிரேயன், நினிவே நாட்டின் சகோதர்களின் அழிவைச் கணடு ரசிப்பதில் அதிக விருப்புள்ளவனுகவிருப்பதை இப்பகுதி விமர்சிக்கின்றது.

ஆபேலின் அழிவுக்குக் காயின் காரணமாகியது ஆபேலிடம் காயீனுக்கு உண்டான வெறுப்புணர்வே. இது போன்றே நினிவே மக்களிடம் யோனுவுக்கு உண்டான வெறுப்பு உணர்வு, அவர்கள் அழிந்து போக வேண்டும் என்று விரும்பியது-அவர்களுடைய மீட்பில் அக்கறை அற்று இருந்தது.

ஒருவனுடைய பற்றுறுதியும் பக்தியும், வெறுப்புணர்வை அகற்றி அன்பின் ஊற்றைத் திறந்து விட வேண்டும். இவ்வுணர்வு யோனுவிடம் காணப்படவில்லை ஏன்? அன்பு இல்லாத பற்றுறுதியாளனுகவும் பக்தியாளனுகவும் இருந்தான் என்றுதான் கூறுதல் வேண்டும். லூக்கா 4: 29.

''மலைச் சிகரத்தில் இருந்து அவரைத் தலைகீழாகத் தள்ளி விடும்படி அவ்விடத்துக்குக் கொண்டு போனுர்கள்.''

இச் செயற்பாட்டைச் செய்யத் துணிந்தவர்களும் துடித்தவர்களுமாகிய இவர்கள், அன்று பற்றுறுதியாளர்கள் - பக்தியாளர்கள் என்று மதிப்பீடு செய்யப்பட்டவர்கள். பற்றுறுதியாளர்களும் பக்திமான்களும் வகுத்த சட்டவிதிகளை எவரும் மீறிச் செயற்பட்டால் அவர்களைப் பகைப்பதும் வெறுப்பதும், இவர்கள் தங்களுக்கென வகுத்துக் கொண்ட தனி வழி. இத் தனி வழி நின்று செயற்பட்ட யோனுவை, வாசகர்களின் முன் நிறுத்துகின்றார் இந் நூலாசிரியர். யோனுவிடம் காணப்படுகின்ற இவ்வியல் பூக்கம் இன்றும் நம்மோடு ஒட்டிக் கொண்டே இருக்கின்றது.

அடுத்து, நம்முன் நிறுத்தப்படுபவர்கள், நினிவே மக்கள். இவர்கள் அழிவின் விளிம்பில் நின்றவர்கள். அழிவைக் குறித்த செய்தி கேட்டபோது, வாழ்வின் வழிக்கு வந்தவர்கள். இவர்கள் பக்தியுடையவர்களும் அல்ல-பற்றுறுதியாளர்களுமல்ல. இறை அன்பை அறியாதவர்கள்-சாதாரணமக்கள். இவர்களைத் தன் வழிக்குக் கொண்டுவருவதில் இறைவன் முந்திக் கொண்டார். அதனுல் நினிவே மக்கள் மனம் திரும்பிய மக்கள் ஆனுர்கள் ஆனுல் பக்தியுள்ள எபிரேயன்-சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கிய இறைவனின் பங்காளன், மனம் திரும்பவே இல்லை.

லூக்கா 15:28 ஆம் வசனத்துக்கு ஒப்ப யோனுவின செயற்பாடும், லூக் 15: 21 ஆம் வசனத்துக்கு ஒப்ப நினிவே மக்களின் புதுவாழ்வும், லூக் 15:22-24 ஆம் வசனங்களுக்கு ஒப்ப இறைவனுடைய மனப்போக்கும் காணப்படுகின்றன. மூன்றாவது கதா பாத்திரமாக வருபவர் இறைவன், மனிதனை, இறைவன் உண்டாக்கியதன் உயர்வான நோக்கம், உறவு என்ற சொல்லுக்கு அழகு செய்வதற்காக என்றே கூறுதல் வேண்டும். (ஆதாரம் ஆதி 3:8 9).

இறை உறவு என்ற சொல்லுக்கு மனிதன் மாசு உண்டாக்கிய போது, இறைவன் வேதனைப்பட்டார். வேதனையின் பின்னணிதான் யோனுவை நினிவே செல்லும்படி பணித்தது. இறைவனுடைய வேதனை, எரிச்சலாக மலர்ந்த சந்தர்ப்பங்களும் உண்டு. (உபா 6:15 ; 32:16).

மனிதன் இறைவனை விட்டுப்பிரிய முயன்றாலும், இறைவன் மனிதனை விட்டுப் பிரிய விரும்புபவர் அல்ல. மனித உறவு, இறைவனுக்கு எப்போதும் தேவைப்படும் ஒன்று. மனித உறவு இல்லாமல் இறைவன் செயலாற்றவும் முடியாது. இவ்வுண்மைக்கு உயிரூட்டம் தருகிறது யோவான் 17:7-11.

இயற்கையாகவே, பாலும் நீரும் பிரிவு நிலை அற்று இருக்கிறது. அடுப்பிலே பாலை வைத்துத் தீயிட்டுக் காய்ச்சும் போது பாலில் இருக்கும் நீர்த்தன்மை ஆவியாகின்றது. பால் பொங்குகின்றது. பால் பொங்கும் வேகத்தைக் குறைக்க வேண்டுமானுல், பொங்கும் பாலில், நீர்த்துளிகளைத் தெளித்தாற் போதும், பொங்கிய பாலின் வேகம் குறைந்துவிடும்.

இதே போன்று, இறைவனேடு உள்ள உறவை மனிதனுனவன் முறிக்க முற்படும்போது, இறைவன் எரிச்சலுள்ளவராகி விடுவதும், இறை உறவிலே மனிதனுனவன் இணையும் போது, தனது அன்பை அள்ளிச் சொரிந்து தனது உறவில் அவனை நெருக்கமாக்கிக் கொள்ளுவதும் இயல்பாக நடப்பவை. நினிவே மக்களின் வாழ்வியலிலும் இது தான் நடந்தது.

நினிவே மக்களை மன்னித்த இறைவன், உறவு என்ற சொல்லைப் புதுப்பித்துக் கொண்டார். சமுகவியலில் - அரசியல் அரங்கில் - சமய உணர்வில் மனம் திரும்புதலும் மன்னிப்பும் அவசியமானது. எனவேதான் லூக்கா 15:7,

''மனம் திரும்புகிற ஒரே பாவியின் நிமித்தம் பரலோகத்தில் சந்தோசம் உண்டாயிருக்கும் என்றார்.'' லூக்கா 15:10.

மனம் திரும்புகிற ஒரே பாவியின் நிமித்தம் இறைத் தூதர்களுக்கு முன்பாக மகிழ்ச்சி உண்டாயிருக்கும் என்றார்.''

மனம் திரும்பிய நினிவே மக்கள் புதுவாழ்வுக்குள் வந்ததை இறைவன் ஏற்றுக் கொண்டார். காரணம் நினிவேயின் மக்கள் தனது மக்கள் என்ற உணர்வு இறைவனின் சிந்தைக்கு விருந்தாக இருந்தது. யோனுவுக்கோ, இச் செயற்பாடு, கசப்பாக இருந்தது. காரணம், நினிவே மக்களைத் தன் மக்களாக அவன் ஏற்றுக் கொள்ள மனமற்று இருந்ததே! இவனிடம் காணப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட இறை அறிவும் காரணமாக இருந்தது என்றும் கூறலாம்.

நம்முடைய இறை அறிவும் பற்றும், அகில உலகவியல் சார்ந்தும் இருக்கவேண்டும். அனைத்து மக்களும் இறைமக்கள் என்ற அன்பு சார்ந்தும் இருக்கவேண்டும். இவைகளே அவசியமானவை. அன்பினுல் அனைவரையும் அனைத்து, அழிவில் இருந்து அவர்களை மீட்டெடுத்து ஆக்கப்பணியில் அன்னவரை ஈடுபத்தி, வளம் நிறைந்த வாழ்வை அவர்களுக்குத் தரும் போதுதான் மனிதனுடைய இறை உறவு குற்றமற்றதாகும். குற்றமற்ற அருட்பணியே இறைவனின் திருப்பணி. துறையூரான்.

வண. ஆ. வே. யேசுதாசன்
காரைநகர்.

## "வடக்கின் போர்"...........

( 18 8 89 இதழின் தொடர்ச்சி )

சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான ''வடக்கின் போர்'' (BATTLE OF THE NORTH) என்று அழைக்கப்பட்ட புகழ் வாய்ந்த போட்டியினையும், யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், சென்ற் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான ''பொன்களின் போர்'' (BATTLE OF THE GOLDS) என்ற பிரபலமான போட்டியினையுமே நான் குறிப்பிட வந்துள்ளேன்.

''வடக்கின் போர்'' (Battle of the North): இதனுடைய 86வது தொடர், 1984ல் தான் கடைசியாக விளையாடப்பட்டது. இதற்குப்பின், இந்தப்பெரும் சமுக வைபவம் ஸ்தம்பித நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. ஆனுல் எதிர்மாருக 72வது ''பொன்களின் போர்'' (72nd Battle of the Golds) விளையாட்டு இரசிகர்களின் மனதினைக் குளிர்விக்கும் வண்ணம், மீண்டும் இந்த ஆண்டு புத்துயிர் பெற்றுவிட்டது. சென்ற். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மார்ச் மாதம் 10ம், 11ம், திகதிகளில் இப்போர் கோலாகலமாக நடந்தேறியது.

கடைசிப்பந்து வீசப்படும் வரையிருந்த விறுவிறுப்போடும், எதிர்பாராத திருப்பங்களோடும் விளையாடப்பட்ட இந்தப்போட்டி, இரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது-சுவைக்கவும் செய்தது. யாழ்ப்பாணத்துக் கிறிக்கெட் பிரியர்கள் இக்கல்லூரிகளின் இரண்டு அதிபர்களையும் மனமாரப் பாராட்டினுர்கள். சென்ற். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வணக்கத்திற்குரிய பிதா பிரான்ஸிஸ் யோசப் அவர்களும், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களும் மனவுறுதியுடன் இந்தப் போட்டியினைத் திறம்பட ஒழுங்குபடுத்தி நடாத்தியமைக்கும் எமது பாராட்டுக்கள்!

''வடக்கின் போர்'' (Battle of the North), மீண்டும் நடைபெற ஆர்வமுடன் முன்னின்று பாடுபட்டவர்களின் முயற்சிகள், ''எங்கே நடத்துவது? என்ற பிரச்சினையினுல் தோல்விகள் கண்டன. இன்றைய நிலைமையினைக் கருத்திற் கொண்டு, இப்போட்டியினைத் தமது திடலில் நடாத்த, சென். ஜோன்ஸ் அழைப்பு விடுத்திருக்கலாமென்று மத்திய கல்லூரியினர் அபிப்பிராயம் கூறுகின்றனர். கடைசியாக நடாத்தப்பட்ட 86வது தொடர்ப்போட்டி 1984ம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரி மைதானத்திற்தான் நடாத்தப்பட்டதென்பதினை நினைவு கூரவேண்டும். இதன்பின் மத்திய கல்லூரியின் மைதானம் 1988ம் ஆண்டுவரை ''யாருக்குமே சொந்தமில்லாத நிலம்'' (No Man's Land) போலக்காடாகியது. புல்-பூண்டுகள் மண்டி, புதர்கள் வளர்ந்து காணப்பட்ட இம் மைதானம், 1988ம் ஆண்டு தைத்திங்கள், மிகுந்த சிரமத்தின் மத்தியில் துப்பரவாக்கப்பட்டுவிட்டது. கடந்த ஐந்தாண்டு காலமாக ஸ்தம்பித நிலையிலிருந்த இப்போட்டியினை, சென். ஜோன்ஸ் கல்லூரி நடாத்த முன்வரும் என எண்ணியிருந்தது மத்திய கல்லூரி. மனமாற்றம் பெற்று, தம்மை அவர்களது மைதானத்தில் விளையாட அழைத்துப் புத்துயிர் தரும் சென். ஜோன்ஸ் என்று கருதியிருந்தது மத்திய கல்லூரி. ஆனுல் சென். ஜோன்ஸ், தயக்கம் காட்டியது. ஒரு சந்தர்ப்பத்தில் நடுநிலை மைதானத்தில் (Neutral grounds) விளையாடலாம் என்ற யோசனையினையும் முன் வைத்தது சென். ஜோன்ஸ். இதனை மத்திய கல்லூரி ஏற்க மறுத்தது, தகுதியான - வலுவான காரணங்களின் அடிப்படையிலேயே இதனை ஏற்க மறுத்தது என்பதனை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ( வளரும் )

## செய்திக்கதிர்.

### ★ குளத்துமண்.

காங்கேசன்துறைச் சீமேந்துக் கூட்டுஸ்தாபனத்தின் சீமேந்து அரைப்பு வேலைக்கு, குளத்துமண் பயன்படுத்தப் படுகிறது. அளவெட்டியிலுள்ள பிளுக்கைக் குளத்திலிருந்து இம்மண் எடுக்கப்படுகிறது.

### ● அதி உயர்ந்த மனிதன்.

ஆசிரியாவின் அதி உயர்ந்த மனிதன் என வர்ணிக்கப்படும் ஈரானின் பிரபல திரைப்பட நடிகர் ஜனுப் மொகமட்லெப்பி, 10.08.89 அன்று, தனது 62வது வயதில் மாரடைப்பினுல் காலமானுர். கின்னஸ் புத்தகத்திலே அதி உயர்ந்த மனிதர் என்ற இடம் பெற்ற இவரின் உயரம் 8' அடியாகும். இவர் டெகரானில் நடந்த படப்பிடிப்பில் கலந்து கொண்ட வேளை மாரடைப்பினுல் காலமானுர்.

### ★ டெய்லி நியூசில்...

தமிழ்த் தீவிரவாத இயக்கமொன்றின் தலைவர் ஒருவர், சுட்டுக் கொல்லப்பட்டதாக அண்மையில் வெளிவந்த செய்தி வெளியாகியிருந்த பத்திரிகை ஒன்றை, கொல்லப்பட்டதாகக் கூறப்பட்ட தலைவர் படித்துக்கொண்டிருந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படத்தை வெள்ளிக்கிழமை பதினேராம் தேதி டெயிலி நியூஸ் பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்கள்.

### ● தூர் தர்ஷனில் ''பைபிள்'' டிசெம்பர் முதல் ஒளிபரப்பு.

இந்திய தூர் தர்ஷனில் மகாபாரதம் தொடர் முடிவடைந்த பின்னர், 'பைபிள்' தொடர்வருகிற டிசம்பர் முதல் ஒளிபரப்பப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

'மைடியர் குட்டி சாத்தான்' என்ற படத்தைத் தயாரித்த குவோதய நிறுவனம் ''பைபிள்க்'' கதையை T. V. த்தொடர்ப் படமாக்கத் தொடங்கியுள்ளனர்.

தாரகை ஒளி:-

நீதி நியாயம் செயமறுத் ததினல்;
நியோர்பாழ்க் கடிக்கப் பட்டே போவர்.

— நீதிமொழிகள். 21 : 07

# எங்கள் கருத்து

## கிறிஸ்தவ திருப்பணியாளர் கடமை.

கடந்த சில ஆண்டுகளாக, தமிழ்ப் பகுதியில் உள்ள கிறிஸ்தவ திருப்பணியாளரிற் சிலர், இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டும், சுடப்பட்டும் வருவதை நாம் அறிவோம். சில மாதங்களுக்கு முன் உடுப்பிட்டியில் பணியாற்றிய எமது ஊழியனின் இரு சகோதரிகளும், எவ்வித காரணமுமின்றிச் சுடப்பட்டதையும் நாம் அறிவோம்.

இவர்கள் செய்த குற்றம் தான் என்ன? துன்புறுத்தப்படும் மக்களுக்காகக் குரல் எழுப்பினர்கள். 'அப்பாவி மக்களைக் கொல்லாதே, அவர்களை வாழவிடு' என்று வாதாடினர்கள். அல்லும் பகலும் அயராது அகதிகளுக்குச் சேவை செய்தார்கள். இதுதான் குற்றமா? ஏற்ற விடை அளிக்கமாட்டார்கள்!

சில ஆண்டுகளுக்கு முன், மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதியில் உள்ள ஏழை மக்கள் வசிப்பதற்கான நிலம் கொடாமல், அவர்களின் அத்தியாவசியமான தேவைகளை அளிக்காமல், அவர்களைக் கொடுமைப் படுத்திய அரசு அதிகாரிகளுக்கு எதிராக, இந்த ஏழை மக்களுடன் சேர்ந்து இந்த அநியாயத்தை எதிர்த்து நடத்திய சாத்விகப் போராட்டத்தில், தமிழ் நாடு இறையியற் கல்லூரி ஆசிரியர் ஒருவரும், சில மாணவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் போடப்பட்டனர்.

ஒரு போதகர் பொதுவாக, நமது சபைகளிலுள்ள மக்களின் ஆன்மீகத் தேவைகளைக் கவனிக்க வேண்டும்; அவர்களை ஒழுங்காகச் சந்தித்து, அவர்களுக்காக ஆராதனை நடத்தி அருளுரை ஆற்றல் வேண்டும். இதுவே போதகர்மாரின் கடமையென எண்ணுகின்றனர் பலர்.

தத்தம் பகுதியிலுள்ள வறியவர்கள், தத்தமது அன்றாட தேவைகளுக்காகச் செய்து வரும் போராட்டங்களிற் கலந்து கொண்டு, அவர்களை அடக்கி ஒடுக்கி வரும் சமுதாயத்தைக் கண்டித்து, இம்மக்களுக்கு நியாயம் வழங்கப்படல் வேண்டுமென வாதாடுவதும், போதகர்மாரின் கடமையெனப் பலர் உணர்வதில்லை.

அடக்கி ஒடுக்கப்பட்டு, வறிய நிலையில் வாடி வதங்கும் மக்களின் மத்தியில் நற்செய்திக் கூட்டங்களை நடத்துவதில் மட்டும் நாம் திருப்தியடையப்படாது. இந் நிலையில் உள்ள மக்களின் வாழ்வில், கிறிஸ்தவ ஊழியரும் ஒன்றுபட்டு - அவர்களின் தேவைகளை அறிந்து – கஷ்டங்களைப் புரிந்து அதற்கேற்ற முறையிலே பணி புரிந்தால், நாம் அவர்களுக்கு அறிவிக்கும் நற்செய்தி கருத்துள்ளதாகும் – அவர்களின் மனத்திலும் பதியும். நாம் ஆற்றும் அருளுரைகள் அனைத்தும் நடைமுறையிற் கொண்டு வரப்பட வேண்டும்.

நமது பேராயரின் ஊக்கத்தினுல் கடந்த சில ஆண்டுகளாக நமது பேராயம், இப்புதிய திசையில் ஆற்றிவரும் திருப்பணி பாராட்டப்பட வேண்டியதே. நமது ஊழியரிற் பலர், இத் திருத்தொண்டில் ஈடுபட்டு, அயராது உழைக்கின்றனர். இதற்கான நன்றியை, கடவுளுக்கு நாம் செலுத்த வேண்டும்.

ஆனல், நமது சபையார் இத்தேவையை இன்னும் உணரவில்லை, அதனுற்தான், இன்னும் குறை கூறிக்கொண்டே இருக்கின்றனர். ஆகவே. அறிவிக்கப்படும் 'நற்செய்தி' என்றால் என்ன, என்பதைச் சபையாருக்கும் ஏழைகளுக்கும் நமது ஊழியர்கள் தெளிவாக விளக்க வேண்டும். நமது உள்ளூர்ச் சபைகள், இந்த உண்மையை நன்கு புரிந்து கொண்டால், அவர்களின் ஒத்துழைப்போடு ஏழைகள் – வறியவர்கள் – துன்புறுவோர் – அடக்கப்படுவோர் ஆகியோரின் மத்தியில் செய்யப்பட்டு வரும் ஊழியம் நிறைவு பெற்றுச் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே, நிலைமை எவ்வாருயினும், கிறிஸ்துவை இலக்காக வைத்து, அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்காக – வறுமை நிலையில் தவிக்கும் மக்களுக்காக – பட்டினியால் வாடி வதங்கும் மக்களுக்காகப் பணியாற்ற, எவ்வித தியாகத்தையும் ஏற்றுச் செயலாற்றுவதே திருப்பணியாளரின் தலையாய கடமை. இதனையே கிறிஸ்து பெருமான் இவ்வுலகில் வாழ்ந்த போது செய்து காட்டினர்; தன்னைப் பின்பற்றி, இத்தகைய பணிகளில் ஈடுபடும்படி தமது அடியாருக்குப் பணித்தார்.

## இசை ...

"நவாலியூர் நாயகி"

இசையென்ற மந்திரத்துக் கெல்லாமே இசையும்
அசைகின்ற புலிகூட அசையாது நிற்கும்
விடங்கொண்ட கொடுநாகம் படங்கொண்டு ஆடும்
வெறிகொண்ட விறல்வேங்கை விழிமூடி மயங்கும்
கஜராஜன் கால்தூக்கி இசைக்கேற்ப ஆடும்
கர்ச்சிக்கும் அரிமாவும் கொடுவாயை மூடும்
கனிவான இசை கேட்டுக் கற்பாறை உருகும்
கடல் பொங்கி அலைமோதிக் கணத்தினில் பெருகும்
இனிக்கின்ற இசைகேட்டு இறைகூட மயங்கும்
அருளோடு வரங்கூட அதற்காக வழங்கும்
துயிலாத குழந்தையும் இசைகேட்டுத் துயிலும்
துயில்கின்ற ஜீவன்கள் துள்ளியே எழும்பும்
தமிழ்காந்த புலவர்கள் இசைகேட்டு மன்னர்
தனிராஜ்யம் பரிசாகக் கொடுத்த கதை உண்டு
கனிவான இராவணனின் கானத்தில் மயங்கி
கைலைச்சிவன் வாள் கொடுத்த கதைகூட உண்டு
யாழ்பாடி பரிசாகப் பெற்றதுதான் – எங்கள்
யாழ்ப்பாணம் என்றுமொரு வரலாறு உண்டு
இதயத்து நோய்க்கெல்லாம் இசைநல்ல மருந்து
இரசிகர்கள் காதுக்கு அது நல்ல விருந்து
இறுதியாய் ஒரு வார்த்தை இசை பற்றி ...... ஒன்று
இசை சற்றுப் பிசகினல் ......? வசை தானே பரிசு!

## இலங்கையில் எவ்விதம்

(11. 8. 1989 இதழின் தொடர்ச்சி)

புறமதத்தினர் சமயரீதியாக எம்மிடமிருந்து என்ன புதிய காரியத்தைக் கற்றுக் கொள்ளலாமென ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். மனங்களைச் சிராக்கக் கூடிய கையாளு முறைகளை நாம் உபயோகிக்கா விட்டால் எமது நற்செய்திப்பணியில் அவர்கள் அக்கறை காட்டப்போவதில்லை. ஒருவனைப் பூரணத்து வமடையச் செய்வதில் எமது நற்செய்தி பின்வரும் சாதனைகளைக் கற்பித்தல் அவசியம்.

ஒருவன் எக்கர்மம் செய்யும் பொழுதும் "நான் செய்கின்றேன். இது என்னுடைய கர்மம். பலன் என்னுடையது" என்ற எண்ணங்களை விலக்கிக் கொள்ள வேண்டும். இவையே மனிதனை பந்தத்துக்குள்ளாக்குகின்றன, பலனைக் கடவுளுக்கு அர்ப்பணித்துக் கர்மம் செய்யும் பொழுது, இவ்வளவு காலமும் பலனிலே நின்ற மனம், இறையை நாடி நிற்கின்றது. இவ்விதம் கருமங்களைச் செய்வதனல், காலக்கிரமத்தில், நான்செய்கின்றேன், எனது கருமம் என்பதும் ஒருவனை விட்டு அகலும். எக்கருமம் செய்யும் பொழுதும் சிந்தையை இறையின் பாற் செலுத்திச் செய்தால் பக்தி முளை கொள்ளத் தொடங்கும். இடைவிடாப்பக்தி ஞானத்துக்கு இட்டுச் செல்லும். ஞானம் வளர, தன் தேகத்தில் சாட்சியாக விருக்கும் ஆன்மா, தேகத்தை விடப்புறம்பானதென்ற அறிவு தோன்றும். இதன் பிரகாரம் ஒருவன் தன் தேகத்திலே சாட்சியாக விருக்கின்ற பரிசுத்த ஆவியை உணர முடிகின்றது. பரிசுத்தாவியால் நிரப்பப்படுகின்றுன். சீஷர்கள் பெந்தெகொஸ்து தினமன்று அடைந்த அனுபவத்தை அடைகின்றுன்.

நற்செய்தியைக் கூறும் பொழுது வேதாகமத்தின் எல்லாப் புத்தகங்களிலும் உள்ளீடாக இருக்கும் ஆன்மீக கருத்துக்களைத் தொகுத்துக் கூறப்பழகிக் கொள்ளவேண்டும். பொதுவாக நற்செய்திப் பணியில் ஈடுபடுபவர்கள் கஷ்டமான புத்தகங்களாகிய வெளிப்படுத்தின கவிசேஷம், பிரசங்கியின் புத்தகம் போன்றவற்றின் தத்துவக்கருத்துக்களை, பொது மக்கள் முன் வைக்கத் தவறிவிடுகிருர்கள். இப்படிச் செய்வதனல் நற்செய்தி ஒரு தலைப்பட்சமாகவே கூறப்படுகின்றது. இது தவிர்க்கப்படவேண்டும்.

நற்செய்தி கூறும் பொழுது கேள்விகள் எழுப்புவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். புறமதத்தவர்களுடைய சந்தேகங்களை நாம் தீர்க்கா விட்டால் எமது பணி வீணுய்ப்போய்விடும். "பேசிக்கெட்டது மௌனம், பேசாமற் கெட்டது ஞானம்" என்பதற்கிசைய கடவுளுடைய அரசின் ஞானத்தை வளர்க்க நாம் முன்வரவேண்டும். எமது நாளாந்த ஆலய வழிபாட்டிலுங் கூட ஒருவர் அருட்செய்தி கூறும் பொழுது, வேறுயாராவது ஒருவர் பரிசுத்தாவியினல் ஏவப்பட்டு, அருட்செய்தியின் அடிப்படையில், ஏதாவது ஒரு கூடுதலான ஆன்மீக விளக்கத்தை அறிவிக்க முன் வந்தால் அவருக்கு இடமளிக்கப்பட வேண்டுமென்று பவுல் அப்போஸ்தலனே கொரிந்தியருக் கெழுதிய முதலாம் நிருபத்தில் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றுர். ஆனல் இவ்வொழுங்கு முறை கையாளப்படுவதில்லை. இது சபையின் அல்லது விஸ்வாசிகளின் ஞான வளர்ச்சிக்குத் தடையாக விருக்கின்றது. நற்செய்திப் பணியாளரின் ஞானம் வளர்வதற்கு முக்யத்துவம் கொடுத்தல் அவசியம்.

நற்செய்திப்பணியிலீடுபவர்கள் ஏனைய மதங்களைப் படித்தல் மிக அவசியம். எமது மதம் கூறும் கருத்துக்களைச் சிறு புத்தக வடிவில் புறமதத்தாருக்கு விநியோசிக்க முற்படுபவர்கள், அவர்களின் புத்தகங்களையும் வாசிப்பதிக்கத் தயங்கக் கூடாது, அப்பொழுது தான் புறமதத்தவர்களும் எமது மதத்தில் பரஸ்பர நம்பிக்கை உடையவர்களாவார்கள்.

## செய்திக் கதிர்.

### ★ இந்திய விஞ்ஞானிகள் குழு அண்டார்டிக்கா பனிக்கண்டத்திற்கு விஜயம்.

அண்டார்டிக்கா பனிக்கண்டத்துக்கு, 9வது ஆராய்ச்சிப் பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்திய விஞ்ஞானிகள் குழு ஒன்று செல்கின்றது. வருகிற நவம்பர் மாதம் இந்தியக்குழு இப்பயணத்தை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்திய விஞ்ஞானிகளின் முதல் 8 பயணங்களும் பனிக்கண்டத்திற்கு அன்று மேற்கொள்ளப் பட்டன.

இக்கண்டத்தில், இந்திய விஞ்ஞானிகள் நிறுவிய முதலாவது நிரந்தர ஆய்வு நிலையத்தின் பெயர் "கங்கர கோத்ரி" என்பதாகும் 8 வது பயணத்தின் போது "வைத்ரி" என்ற ஆய்வு நிலையத்தை நிறுவினர்.

அன்று பனிக்கண்டத்தில் இந்திய விஞ்ஞானிகள் கண்டெடுத்த பாறைகள், தென் இந்தியாவில் உள்ள கருங்கற்களை ஒத்ததாக அமைந்திருந்தன என்று ஆய்வின் போது தெரியவந்துள்ளது. 9 வது ஆராய்ச்சிப் பயணத்தை மேற்கொண்டு செல்லும் இந்திய விஞ்ஞானிகள் குழு, கற்பாறைகளைப் பற்றியே தமது ஆய்வுகளை மேன் மேலும் நடத்தும்.

### மருந்தில்லாமற் சிகிச்சை

மருந்து இல்லாமலே இருதய நோய்க்குச் சிகிச்சை அளிக்கும் முறை ஒன்றை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

வாயு சம்பந்தப்பட்ட நோய், குடல்புண், இரத்த அழுத்தம், இதயநோய் போன்றவற்றை இந்தப் புதிய முறை குணப்படுத்துகிறது. 'Electric magnetic" கதிர்வீச்சு மூலம் இச்சிகிச்சை அளிக்கப்படுகிறது இதன் மூலம் நோய்க்கு விரைவான குணம் கிடைக்கின்றது என விஞ்ஞான மருத்துவர் குழு கருதுகிறது.

### இராமாயண மகாநாடு.

ஐந்தாவது உலக இராமாயண மாநாடு ஒன்று எதிர்வரும் டிசெம்பர் மாதத்திலே நேபாளத்தில் நடைபெற்வுள்ளது. ஜனக்பூர் என்னுமிடத்தில் டிசம்பர் 1 முதல் 3 வரை நடைபெறவுள்ள இம் மகாநாட்டை, விஸ்வசாஹித்ய சமஸ்கிருத சன்ஸ்தன் ஒழுங்கு செய்கிறது.

### ★ டென் மார்க் அறிஞர் நடத்தும் தமிழர் பற்றிய ஆய்வு.

இந்து மத வழிபாடு, தென் இந்தியவரலாறு, தமிழ் மக்களின் நிலைமை ஆகிய விடயங்கள் குறித்து, டென்மார்க்கில் உள்ள லாஸ் கெயர் ஹேறால் என்பவர் ஆய்வுகள் மேற்கொண்டு நூல்களை வெளியிடுகிருர். டென்மார்க்கிற்கு விஜயம் செய்த யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி இவரைச் சந்தித்துக் கலந்துரையாடினுர்.

இலங்கைத் தமிழர் பிரச்னைகள் குறித்துக் கட்டுரைகளை அனுப்பித் தமது ஆய்வுக்கு உதவும்படி கெயர் ஹேறால் அவர்கள் நமது பேராசிரியரைக்கேட்டுள்ளார்கள்.

அண்மையில் "தமிழ் - ஆங்கிலம்" என்ற தலைப்பில் டெனிஸ் மொழியில் எழுதிய ஒரு நூலை அவர் வெளியிட்டுள்ளார். இவரது ஆய்வுகள் தொடர்கின்றன.

### குறளோவியம் ஆங்கிலத்தில்

கலைஞர் கருணாநிதியின் குறளோவியம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட விருக்கின்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழக வைர விழாவின் போது ஆங்கில மொழி பெயர்ப்பு வெளியிடப்படும். இத்தகவலை துணைவேந்தர், சேது நாராயணன் வெளியிட்டார். குறளோவியம் நூலை மொழி பெயர்க்க, கலைஞர் கருணாநிதி ஒப்புதல் கொடுத்திருக்கிருர்.

# JOURNEY TOWARDS THE END.

Journey starts from the day of Birth,
It prolongs towards the uncertain earth,
Day by day the experience we had,
Unforgettable till the bitter bed.

After several years my Journey,
Nothing had happened till My memory,
But, when last travel Started something hit my mind.
Little different from unusual way kind.

The cry of huge mob, shouting,
The innocent human is suffering
I tried to open my eyes to have a vision,
I could see a person carrying a cross in passion.

I recollected the words from the pulpit,
An innocent person died for the culprit,
The crowd cried silently for the incident,
I too moved to see the person at least by an accident.

People don't know why they are accompanying
Even though they feel somehow worrying,
Not knowing the cause,
Just to spend a pass.

Does he suffer for me too
In what way I am connected though
Nothing I can say boldly
In no way he crossed my way totally.

I saw the people nailed him on the cross
Finally killed him too.
People murmured that he would again
But for me, it is final to keep remain.

If he died for my sake.
I should rise on the third day break,
If you certain in this belief
Come to my grave after the third day grief,

I am waiting at the third day to get up
But nobody came to my rescue
I heard the voice that he had risen
But keeping myself remain to listen.

I hope, he would come to me for a visit
But, I was told he had taken up to heaven
I am still waiting for him to come
Before the world to forget this belief

Why I am still lying in the dark,
Perhaps, my sins are holding the clock,
The son of man is sinless to rise,
My sins keep me in the Hollow den,

## The Youth in the Church's Mission.

— continued from the last (18-8-89) issue —

4. *Disinterested and disappointed youth.*

Many of our youths today are not interested in participating in the life of the Church. There is a sense of disappointment among them with regard to the Church's life and this disappointment leads to disinterestedness. The reason for their disappointment is basically the nature of the Church today: the vast gap between what the Church is intended for and what it is now, the paradox of the rich and poor in the Church, the perpetuation of casteism and division, the glamour for power, the church becoming centre of accumulation of wealth and so on. Because of these they feel discouraged to take part actively in the life of the Church.

5. *Lack of Vision for the future.*

Many of our young people today have not really understood the purpose of life. They do not have a future vision in their life. They are so much caught up in the materialism of the world today, all that they want in life is a good job, a good house with all modern comforts and a good family life. There is nothing wrong in aspiring for all these but this is not all that we are called for. Their vision for the future is limited to their self-advancement and material pursuits.

6. *Crisis of Model for Life.*

The youth look for some model for life to follow. But there is a crisis of model for them to follow in the Church. The Church is so badly divided that they are not able to find any authentic model for them to follow. The Church is called to represent Christ in the world today. But the way it exists today, the Church is not able to represent Christ in its real sense. In their search for a model to follow they are led astray by various sectarian groups and as a result the young people are not with us today. They fall easy prey to emotional appeals of fundamentalism.

I have mentioned some of the challenges that we should take seriously to stimulate the participation of young people in the life of the Church today. We need not be discouraged by these challenges. The potentialities and the resources with the youths are enormous. We will be able to overcome these challenges if we reckon with these challenges with an open mind.

Keeping in mind these challenges we shall now see the possibilities and opportunities to equip our young people for participating in God's mission.

1. *A Vision for the Future.*

The first and the foremost thing we need to do is to help the young people to have a vision for the future. The future which we are all looking forward to is the Hope in the future of God. i.e. the kingdom of God. The Kingdom of God is God's rule where peace and justice will prevail. This kingdom is already present in our midst in and through Jesus Christ. Our young people should be enabled to capture this vision of God's Kingdom. When our eyes are set on the life of this Kingdom, which God has promised to all of us naturally all our young people will be challenged to do some thing to change the present condition of life in the light of the vision. Many young people do not act today as they lack this vision in life.

2. *Centrality of Christ.*

Jesus Christ is the ultimate truth and the meaning of human existence. In Him we have answers to all human problems. He should become the centre of our life and programmes. He should be taken as a pattern or as a model to our young people. As we have already pointed out, there is a crisis among the young people for a model to follow, and Jesus is the perfect model to follow. God was in Christ reconciling the world with God. So, Christ is the answer to all our divisions both in the Church and outside in terms of caste, money and social status in life. When our young people are called to take Christ as their model, they will be challenged to participate in God's mission for the world today.

3. *The Necessity of Word of God.*

Any participation in God's mission should necessarily be the outcome of the study of the Word of God. The theme of the necessity of involvement in the struggles of the people should be highlighted from the Word of God. And they should be enabled to study the Word of God in relation to their own contexts. We are aware that in Latin America, only through the study of the Word of God in relation to their own life situations in the basic groups, the idea of liberation caught fire and enabled them to fight against evil forces in society.

4. *Radical attitudinal change.*

When our young people are challenged to take Christ as the model and pattern of their life through the study of the Word of God, automatically it should bring radical attitudinal change in every individual. If every individual decides to act in a just manner realising the needs of others then the transformation of the society is possible, without the individual transformation, the transformation of the society will not last for long.

5. *Recognition of the potentialities of youth by the Church.*

In the Churches youth are often considered as bunch of volunteers in helping the elders for conducting the programmes, decorating the church, singing carols and so on. They are not often recognised as people with potentialities which can be used for the growth of the Church and for its participation in Mission. Many times the youth are used by the elders to achieve their own vested interests. The Church must recognise the potentialities of the youth and they should be provided with opportunities to make their legitimate contribution to the growth of the Church and in its participation in God's mission.

6. *Spirituality and Involvement.*

We have already pointed out that spirituality which is indifferent to the struggles of the people around is self-centered and the social action without the essential spiritual basis stems from a vacuum. What is needed is an essential and continuous interaction between spirituality and social action. One becomes incomplete without the other. Our involvement in societal affaires should come out of our spirituality and our spirituality should be strengthened by our involvement.

7. *World as the Centre of God's mission.*

The self-centered, perverted spiritualism of many of our young people prevent them from participating in God's mission for the World. They should be made aware of the socio-economic and political conditions of society around them and the need to participate in the struggles of that community. God doesn't, limit his activity to the Christian sphere alone. He is in the midst of the people. Our young people should be challenged to get away from their indoor church-centered activities to the community to participate in God's mission with the people.

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/ News 89
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press, 182, 1st, Cross Street Jaffna on Friday 25,AUGUST 1989 and published by The Rev. THEVANESAN, 182, First Cross Street, Jaffna.